# உதயன்

சுடர் : 37 கதிர் : 360 | திங்கட்கிழமை 21 நவம்பர் 2022 | கார்த்திகை 05 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50


# கதிரையைப் பலப்படுத்தும் இரகசிய முயற்சியில் ரணில்



## எம்.பிக்கள் பலருக்கு "கொக்கி" இரகசிய சந்திப்புக்களால் பரபரப்பு

கொழும்பு, நவம்பர் 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வளைத்துப்போடும் வேலைகள் திரைமறைவில் இடம்பெறுகின்றன என்று அறியமுடிகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள நிலையில், அமைச்சுப் பதவிகளைக் கேட்டு பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கம் அதிகமாகக் கண் வைத்திருப்பது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் என்றும், அந்தக் கட்சி உறுப்பினர்கள் பலரை இரகசியமாகச் சந்தித்துப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று உள்ளகத் தகவல்களில் இருந்து அறிய முடிகின்றது. 11

## நீரில் மூழ்கி யுவதி சாவு!

வடமராட்சியில் சோகம்

யாழ்ப்பாணம், நவ.21

வடமராட்சி, கற்கோவளத்தில் நீர்த்தேக்கத்தில் மூழ்கி யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த அலன்மேரி ஆனந்தராஜா (வயது-18) என்பவரே உயிரிழுந்தவராவார். 11

## கஞ்சா கலந்த மாவா இளைஞர் கைது

யாழ்ப்பாணம், நவ.21

கஞ்சா கலந்த மாவா போதைப் பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். 22 வயது இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள் ளார். 11

## ரூ. 120 மில். மோசடி சகோதரிகள் கைது!

கொழும்பு, நவ.21

நோர்வேயில் உள்ள இலங்கையரிடம் 120 மில்லியன் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் இரு பெண் சகோதரிகள் குற்றப் புலனாய்வு 11

## ஹெரோய்னுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். 11

## பட்ஜெட்டுக்கு பின்னர் ஆளுநர்கள் மாற்றம்?

கொழும்பு, நவ.21

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒன்பது மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் 11



## ஜனாதிபதி ரணில் மன்னார் பயணம்

மன்னார், நவ.21

வடக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்துக்குக் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். 11

## 18 கிராம் ஹெரோய்னுடன் இளைஞரொருவர் கைது!

சாவகச்சேரி, நவ. 21

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் போதைப்பொருளான ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 11

## தாய்ப்பால் புரையேறி 54 நாள் குழந்தை சாவு!

சாவகச்சேரி, நவ.21

தாய்ப்பால் புரையேறி 54நாள் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மீசாலை மேற்கில் நடந்துள்ளது.

குழந்தைக்கு தாய் பால் ஊட்டியபோது புரையேறி குழந்தை மயக்கமடைந்துள்ளது. குழந்தையை சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தி 11

## சாலை கடல் நீரேரியில் மூழ்கிய இளைஞர் மாயம்

விரிவு - பக். 10

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.21

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தங்களை ஆகுதியாக்கியவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது.

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தங்களை ஆகுதியாக்கியவர் 11

## மாவீரர்களின் பெயர்ப் பட்டியலில் இடைச்செருகல்கள் வேண்டாம்

பஸீர் காக்கா கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.21

தமிழீழ மாவீரர் பணிமனையால் வெளியிடப்பட்ட மாவீரர் பட்டியலில் உள்ளோரையும், 2009 மே 15ஆம் திகதிக்குப் பின்னர் வெளியுலகத்துக்குத் தகவல் தெரிவிக்க முடியாத களச்சூழலில் வீரச் 11

## நாடு திரும்பிய பஸிலால் ஏதும் மாறிவிட மாட்டாது

திஸ்ஸ அத்தநாயக்க நக்கல்

கொழும்பு, நவ.21

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச நாடு திரும்பினார் என்பதற்காக நாட்டில் புதிதாக ஒரு மாற்றமும் ஏற்படப்போவதில்லை. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர் ஒன்றும் ஞானி கிடையாது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா – நெடுங்கேணி

# நொச்சியடி ஐயனார் ஆலயம் ஆக்கிரமிக்கப்படும் அபாயம்!

**வவுனியா, நவ. 21**

**வவுனியா - நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயம் தொல்பொருள் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியும் அதில் அமைந்துள்ள ஆலயமும் ஆக்கிரமிக்கப்படும் அபாயம் உள்ளதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

குறித்த ஐயனார் ஆலயமானது இந்துக்களின் வேள்வி வழிபாட்டு இடமாக வரலாற்றுக்காலமாக இருந்துவந்த நிலையில், தற்போது தொல்பொருளியல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு பதாகை யொன்று நடப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திலிருந்து சுமார் எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. அங்கு புதையல் தோண்டுவதற்கு முன் நெடுப்புகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்து பொலிஸார் அண்மை நாள்களாகக் கடமை யில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பின்னணியிலேயே தற்போது அங்கு தொல்பொருள் தொடர்பான பதாகை நடப்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் மிகப்பழமை யானது என்பதில் மாற்றுக்கருத் தில்லை என்று தெரிவிக்கும் பிர தேச மக்கள், ஆலயத்தின் தொல் பொருள் சின்னங்களும் அதன் பழமையும் மடைமாற்றம் செய்யப் படும் அபாயநிலை உள்ளதாகவும் இந்த விடயத்தில் நிறுவன மயப்ப டுத்தப்பட்ட இறுக்கமான கண்கா ணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். (ம)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# தடுப்பிலுள்ளோர் தொடர்பில் விரைவில் தீர்க்கமான முடிவு!

கொழும்பு, நவ. 21

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்ட கைதிகள் தொடர்பில் எதிர்வரும் இரு வாரங் களுக்குள் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சர் விஜய தாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்த தாவது:-

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகி யோருடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோரிடமிருந்து குறித்த கைதிகள் தொடர்பான அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவுள் ளது. அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தற்போது விடுதே லைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 15 பேரும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 76 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்டு, சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் எண் ணிக்கை 16 ஆகும். அவர்கள் தொடர்பிலும் விரை வில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என நீதியமைச் சர் இதன்போது மேலும் தெரிவித்தார். (ச-இ)

# கசிப்பு விற்பனை: பெண் கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 21

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பகுதியில் கசிப்பு விற்பனை யில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 46 வயதான பெண் ஒருவர் நேற்றுக் காலை கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகக் கோப்பாய் பொலி ஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

அவரிடமிருந்து 2 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (ம-125)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான

# மாணவர் தலைவர்களை உடனடியாக விடுவிக்குக

### சர்வதேச மன்னிப்புச் சபை அழுத்தம்


கொழும்பு, நவ. 21

அரச எதிர்ப்புப் போராட்டங் களின்போது கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுவிக் கப்படவேண்டும். போராட்டக்கா ரர்களுக்கு எதிராகப் பயங்கர வாதக் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்துவது நீதியற்ற முறை மையாகும் - இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலா ளர் நாயகம் அக்னேஸ் கலா மார்ட் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாணவர் தலைவர்களான வசந்த முதலிகே மற்றும் கல்வேல ஸ்ரீதம்ம தேரர் ஆகியோர் 90 நாள்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மாணவர் தலைவர்களுக்கு எதிரான குற் றச்சாட்டுகளை இலங்கை அதி காரிகள் கைவிடவேண்டும். இது இலங்கையில் மனித உரிமை கள் மீது கடும் தாக்கத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

அமைதியான முறையில் மேற் கொள்ளும் போராட்டங்களின் போது பொதுமக்கள் மீது பொலி ஸாரின் கடுமையான நடவ டிக்கை குறித்தும் நாம் அதிருப் தியடைகிறோம். அமைதியான ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்வோர் அல்லது அதில் கலந்து கொள்பவர்களை குற்றவாளி யாக்குவதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களைப் பயன் படுத்த முடியாது. சர்வதேச தரா தரங்களைக் கொண்டிராத பயங் கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும், தடுத்துவைக்கப்பட் டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப் படவேண்டும்- என்றார். (ச-இ)



# கசிப்புக் காய்ச்சிய இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 21

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அச்செழுப் பகுதி யில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமை வாக மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந் தேகநபரிடமிருந்து 20 லீற்றர் கோடா, 7 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் அச் சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள் ளார். அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)



# கசிப்புக் காய்ச்சிய தாயும் மகனும் கைது

யாழ்ப்பாணம், நவ. 21

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச் சாட்டில் தாயும் மகனும் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே மேற் படி மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

அவர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப் பும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. (ம-14,26)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாணவர்களை தடுத்துவைத்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு!

கொழும்பு, நவ. 21

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத் தின்போது கைதான மாணவர் தலை வர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் கீழ் தொடர்ந்தும் தடுத்துவைப்பதற் கான உத்தரவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் இரு மாணவர் தலைவர்க ளான, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்துப் பல்க லைக்கழக பிக்குமார்மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்மதேரர் ஆகியோரை தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தடுத்துவைப்பதற் கான உத்தரவில் கையெழுத்திட ஜனா திபதி மறுத்துள்ளார். அத்துடன் பயங்கர வாதத் தடைச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள் ளார் என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான வழக்குகள் அர சாங்கம் நீண்டகாலத்தில் எவ்வாறு கையா ளும் என்ற கேள்விக்கு நாட்டின் வழ மையான சட்டங்களின் அடிப்படையில் இந்த வழக்குகள் கையாளப்படும் என அரசாங்க வட்டாரமொன்று தெரிவித்தது - என்று அந்த ஊடகம் மேலும் தெரி வித்துள்ளது. காலிமுகத்திடலிலும் அலரி மாளிகைக்கு வெளியேயும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் இரு மாணவர் தலைவர்கள் கைதுசெய்யப் பட்டு அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள் ளமை இலங்கையை மேலும் அழுத்தத் துக்குள் அண்மைக்காலமாக தள்ளி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவகத்துக்கு தண்டம் விதிப்பு

சாவகச்சேரி, நவ. 21

கொடிகாமம் நகரப் பகுதியிலுள்ள உணவகமொன்றுக்கு தவறான உணவுக் கையாள் கைக்காகத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் நகரப் பகுதியிலுள்ள சில உணவகங்களில் சோதனை நடவடிக்கைகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. கொடிகாமம், எழுதுமட்டுவாழ், மட்டுவில், வரணி ஆகிய பிரிவுகளின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இந்தச் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போதே தவறான உணவு கையாள்கைக்காக மேற்படி உணவகத்துக்குக் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் தண்டமும் விதிக்கப்பட்டது. (ம-14,159)



# மாட்டை திருடினார்களென 3 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

கரம்பன் பகுதியிலிருந்து முச்சக்கரவண்டியில் மாட்டைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

கரம்பன் பகுதியிலிருந்து மாடு திருடிச் செல்லப்படுகின்றது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நாரந்தனைப் பகுதியில் முச்சக்கரவண்டியை வழிமறித்து சோதனை செய்யப்பட்டது. இதன்போதே மேற்படி கடத்தல் முறியடிக்கப்பட்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களில் இருவர் ஐந்துசந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், மற்றையவர் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14,23)

## பௌத்தத்தின் பிடியிலிருந்து விடுவித்து

# திருக்கோணேஸ்வரத்தை புனிதப் பிரதேசமாக்குக

### *சாவகச்சேரி பிரதேசசபையில் தீர்மானம்*

திருகோணமலை, நவ. 21

**திருக்கோணேஸ்வரம் ஆலயச் சூழலை பௌத்த மயமாக்கலில் இருந்து விடுவித்து புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது**

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வைத்திலிங்கம் ஜெகதாஸால் கொண்டுவரப்பட்ட பிரேரணையே இவ்வாறு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொல்பொருள் என்று கூறிக்கொண்டு பல்லாயிரம் ஆண்டு கால சைவத்தமிழ் வரலாறுகளை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளால் இன, மத முரண்பாடுகளை தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்த முனைகின்றது. இதனை அனுமதிக்கமுடியாது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை பௌத்த மயமாக்கும் சதித்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே உடனே அதைத் தடுத்து நிறுத்தி இந்தப் பிரதேசத்தை புனித பிரதேசமாக மாற்றவேண்டும்.

இலங்கையின் மிகத் தொன்மை வாய்ந்த பாடல் பெற்றத் தலமாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் சைவத்தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று நிலம். அந்த ஆலயம் சூழ்ந்த இடங்களில் சட்டவிரோதமாக கடைகள் அமைக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தால் சில தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதும் ஒட்டுமொத்த இந்துக்களின் மனங்களை வேதனை அடைய வைத்திருக்கின்றது.

தொல்பொருள் திணைக்களம் ஒரு ஆலய விடயத்துக்குள் தலையிடுகின்றது என்றால், நிச்சயம் அங்கு ஒரு இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தை நோக்கினால், திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை உள்ளடக்கியவாறு, உல்லாசத்துறை அபிவிருத்தியென்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் கோணேஸ்வரர் ஆலயத்தை விழுங்கும் ஒரு செயற்பாடுதான்.

ஏனெனில் உல்லாசத்துறை அபிவிருத்தியை செய்வதற்கு பல்வேறு இடங்கள் இருக்கின்றபோது, குறிப்பாக கோணேஸ்வரர் ஆலயப்பகுதியை தெரிவுசெய்ய வேண்டிய அவசியமென்ன? எனவே அங்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும். கோணேஸ்வரர் கோயிலில் திட்டமிட்டு நிறுவப்படும் பௌத்த மயமாக்கல் சிங்களக் குடியேற்றங்கள் என்பவற்றைத் தடுத்து ஆலய வளாகத்தை சூழவுள்ள பிரதேசங்களை புனித பிரதேசமாக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதி, பிரதமர், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (ம-27)

# கேரதீவில் வாள்வெட்டு இளைஞர் படுகாயம்!

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி - கேரதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கேரதீவுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் வீதியால் சென்ற இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். வாள் வெட்டுத் தாக்குதலுக்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை என்று தெரிவித்த சாவகச்சேரி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,125)



கொடிகாமம் பொதுச்சந்தையின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் விதமாக அண்மையில் களப் பரிசோதனையொன்று முன்னெடுக்கப்பட்டது. பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தப் பரிசோதனையை மேற்கொண்டனர். (ம-14,159)

# சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்க நடவடிக்கை

### *3 லட்சம் கிலோகிராம் சேதன உரத்துக்கு கேள்வி*

யாழ்ப்பாணம், நவ. 21

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் கல்லுண்டாய் பகுதியிலுள்ள சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தில் 3 லட்சம் கிலோகிராம் சேதன உரத்துக்கு கேள்வி தற்பொழுது நிலவுகின்றது. இதனால், மேற்படி சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தின் வினைத்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் பகுதியிலுள்ள சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தின் வினைத்திறனை மேம்படுத்தி சேதனப் பசளை உற்பத்தியை விருத்தி செய்யும் முகமாக வலி.தென்மேற்குப் பிரதேச சபையினர், மட்டக்களப்பு காத்தான்குடி நகரசபைக்கு பயணமொன்றை மேற் கொள்ளவுள்ளனர். வலி.தென்மேற்கு பிரதேசசபை அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது இதற்கான அனுமதி பெறப்பட்டது. அதற்கமைய வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் இயந்திரப் பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்று, எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் காத்தான்குடி நகர சபைக்கு பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

காத்தான்குடி நகரசபை முன்மாதிரியான முறையில் இயந்திரப் பயன்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அங்கு சென்று இயந்திரங்களைப் பார்வையிட்டு கல்லுண்டாய் வெளியில் இயங்கும் சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்கும் முகமாக இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர். (ம-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவமே உலகில் ஒழுக்கமற்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கருத்து

**அம்பாறை, நவ. 21**

**உலகிலேயே ஒழுக்கமற்ற இராணுவமாக நாம் இலங்கை இராணுவத்தையே பார்க்கின்றோம். உலகில் எங்கும் எந்த இராணுவமும் உயிர் நீத்தவர்களின் சடலங்களைக் கிளறி எறியவில்லை. ஆனால், இலங்கை இராணுவம் அதனைச் செய்தது - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**



அம்பாறையில் வைத்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மாதம் தமிழர்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் புனிதமான மாதம். 2009 ஆம் ஆண்டு வரையில் இந்த நினைவேந்தல்கள் பெரியளவில் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

2009 மே 18 ஆம் திகதி எமது உரிமைப் போராட்டம் இனஅழிப்பின் ஊடாக முடிவுறுத்தப்பட்ட நிலையில் வடக்கு- கிழக்கிலுள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலிருந்தும் வித்துடல்கள் இராணுவத்தினரால் கிளறி எறியப்பட்டன.

அதன் பின்னர் பல துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். பல துயிலும் இல்லங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க முடியாத வகையில் இலங்கை இராணுவத்தினரும் புலனாய்வுத்துறையினரும் நெருக்கடிகளை வழங்கி வருகின்றனர்.

அதனையும் தாண்டி எமது உறவுகளை எமது மக்கள் நினைவு கூர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இந்த வருடமும் 21 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரையில் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படும். சகல தடைகளையும் தாண்டி நினைவேந்தல் உரிமையை நாங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

இன்று பல மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவம் குடிகொண்டுள்ளது. வடக்கு- கிழக்கில் உள்ள பல மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர்.

அந்த இடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும். இது இராணுவத்தின் ஒழுக்கமற்ற நடவடிக்கையையே காட்டுகின்றது. இறந்தவர்களின் உடலங்களைக் கிளறி எறிந்த செயலை உலகில் எந்த இராணுவமும் செய்ததாக நாங்கள் அறியவில்லை. உலகிலேயே ஒழுக்கமற்ற, நெறிகெட்ட இராணுவம் என்பதை இலங்கை இராணுவத்தினர் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகின்றனர், இந்த நிலைமை மாறவேண்டும்.

தமிழினம் இந்தத் தீவிலே வாழும் வரைக்கும் நினைவேந்தல்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும். வெறுமனே விளக்கேற்றுவதும் மாலை போடுவதும் கடமையல்ல.

மாவீரர்களின் இலட்சியத்தை அடைவதற்கு ஒவ்வொருவரும் நேர்மையாகச் செயற்படவேண்டும். ஒரு புறம் அரசின் தோளில் கைகளைப் போட்டுக்கொண்டு அவர்கள் போடும் எலும்புத்துண்டுகளுக்காக தமிழ்த் தேசியத்தை நாங்கள் விற்கக்கூடாது. நாம் அனைவரும் அந்த இலட்சியத்தை அடைவதற்காக ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் - என்றார். (ம-22)



# துயிலுமில்ல சிரமதானப் பணிகளுக்கு திருக்கோவில் பொலிஸார் இடையூறு!

அம்பாறை, நவ. 21

அம்பாறை - கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்ல சிரமதானப் பணிகளின்போது பொலிஸார் பொதுமக்களுக்கும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தியுள்ளனர்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு வடக்கு- கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் மாவீரர் பணிக் குழுவினர், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் சிரமதானம் செய்யப்பட்டு வருகின்றன. அம்பாறையிலுள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் நேற்றுமுன்தினம் சிரமதானம் செய்யப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், தவிசாளர்கள் உள்ளிட்ட குழுவினர் சிரமதானத்தின்போது அங்கு பிரசன்னமாகியிருந்தனர். இந்தத் துப்புரவுப் பணிகளுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டது.

துப்புரவுப் பணிகளால் இனப்பிரச்சினைகள் எழக்கூடும் என்பதால் உடனடியாக இந்தப் பணிகளை முடிவுறுத்த வேண்டும் என்று பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். எனினும், "இது எமது மண்ணுக்காக உயிர் நீத்த உறவுகளை நினைவுகூருகின்ற நிகழ்வு. இது எமது உரிமை. இதில் எந்தப் பிரச்சினையும் வரப்போவதில்லை" என்று மக்கள் பிரதிநிதிகள் கூறியதையடுத்து பொலிஸார் அங்கிருந்து சென்றனர். அதனைத் தொடர்ந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-22)

# மாவீரர் துயிலுமில்லங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!

## கலையரசன் எம்.பி. வலியுறுத்து




அம்பாறை, நவ. 21

மாவீரர் துயிலுமில்லங்கள் பாதுகாக்கப்படவேண்டும். நினைவேந்தல்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப்படவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கு.கலையரசன்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மரணித்த எமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்துகின்ற, கடமையைச் செய்கின்ற சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கவேண்டும். கடந்த காலத்தில் இருந்தாற்போல் ஒரு அடக்குமுறையான நிலைமை தற்போது இல்லாதுவிட்டாலும், இப்போதும்கூட ஆங்காங்கே கெடுபிடிகள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

எமது மரணித்த மாவீரர்களுக்குச் சுடரேற்றி எங்களது நன்றிக் கடனை அகவணக்கமாகச் செலுத்துகின்ற எங்களுடைய பண்பாட்டு ரீதியான கலாசாரத்தை தமிழ் மக்கள் காலாகாலமாகச் செய்து வருகின்றார்கள். உண்மையிலே எமது உயிர்களின் தியாகங்களுக்குரிய நன்றிக்கடனைச் செய்ய வேண்டியது எமது தலையாய கடமை. அதை உச்சக்கட்டப் புரிந்துணர்வின் அடிப்படையில் அரசாங்கம் அனுமதிக்கவேண்டும்- என்றார். (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கவலைகள் மறையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நிதி முன்னேற்றம் ஏற்படும். ஆரோக்கியம் பற்றிய கவலை தீரும். பெற்றோர் உடல்நலனில் இருந்த சிரமங்கள் குறையும்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உண்டாகும். தேவையின்றி யாரையும் பகைத்துக்கொள்ளவேண்டாம். குடும்பத்தில் புதிய உறவுகள் வர வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** கவலைகள் தீரும். சிலருக்கு காதல் உணர்வு அதிகரிக்கும். பேசும் போது கவனம் தேவை. முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பணியிடக் கவலை தீரும்.

**கடகம்:** வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பெரியவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். கலகலப்பான நாள். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். அமைதியான நாள்.

**சிம்மம்:** கடந்த கால வருத்தங்களை நினைக்காமல் அவற்றை விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியானநாள். எதையும் ஆராயாமல் ஏற்க வேண்டாம். உறவுகளைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** யோகமானநாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிதி நிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி [illegible] நட்பாகும் [illegible] அதிகரிக்கும்.

**துலாம்:** நேற்றிருந்த கவலை ஒன்று முற்றிலும் தீரும். நட்பு வளரும். வாக்குவாதத்தால் தொல்லை வராதபடி கவனமாக இருங்கள். வீட்டில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சிகளை எடுப்பீர்கள். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருச்சிகம்:** பணியாளர்கள் பின் விளைவுகளை அறிந்து செயற்படுவது நல்லது. புதிதாக அறிமுகமாகும் நபர்களால் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியான நாள். உங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கும்.

**தனுசு:** நல்லவர்களை பகைத்துக் கொள்வது தப்பு என்பதை உணர்வீர்கள். நீங்கள் எண்ணிய விஷயங்கள் இன்று சிறப்பாக நடைபெறும். பொறுப்பு ஒன்றை நல்ல முறையில் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** குடும்ப விஷயங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மனநிம்மதி கூடும். குடும்ப சச்சரவில் அமைதி தேவை. நெருக்கமானவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** குழந்தைகளின் வாழ்வில் செழிப்பான மாற்றம் உண்டு. மற்றவர்களின் மனம் நோகக்கூடாது என்ற கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்டம் உங்களை திக்குமுக்காட வைக்கும். கலகலப்பான நாள்.

**மீனம்:** குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று இன்று நடக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சகோதரர்களின் மூலம் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் ஒருவரின் சிறப்பு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாவீரர்களுக்கு இதுவும் நினைவேந்தலே!

தமிழினத்தின் விடிவுக்காக தங்கள் இன்னுயிரை ஈகம் செய்த மறவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் இன்று – நவம்பர் 21 – ஆரம்பமாகின்றது. இந்தப் புனிதவாரத்தில் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர்களின் தியாகங்களை மனதில் இருத்தி, அவர்களின் தீரங்களையும், தியாகங்களையும் அடுத்த தலைமுறையினரிடத்தே எடுத்துரைக்கும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடாகியிருக்கின்றன. மாவீரர் வாரத்தின் இறுதிநாளான நவம்பர் 27 ஆம் திகதி , இந்த நினைவேந்தலின் அதியுன்னதத்தை எடுத்தியம்பும் வகையில் சுடரேற்றி தமிழ் மக்கள் அஞ்சலிப்பர்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் வாழ்வியலில் பிரிக்கவோ தடுக்கவோ முடியாத நிகழ்வாக மாவீரர் நினைவேந்தல் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 2008 ஆம் ஆண்டு, போரை வழிநடத்திய அப்போதைய இராணுவத்தளபதி பொன்சேகா 'இந்த வருடம் தான் மாவீரர்நாளை இறுதியாகக் கொண்டாடுவீர்கள். இனி மேல் புலிகளும் இல்லை, மாவீரர் நாளுமில்லை' என்று பகிரங்கமாக அறிவித்தார். அவர் சொன்னபடி 2009 இல் சர்வதேசச் சதியால் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டனர். தமிழர் தாயகமெங்கும் இருந்த மாவீரர் துயிலுமில்லங்கள் புல்டோசர்கள் மூலம் அகழப்பட்டு, அங்கிருந்த வித்துடல்கள் சிதைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பல மாவீரர் துயிலும் இல்லங்களில் படைத்தரப்பில் முகாம்களும் அமைக்கப்பட்டன. இப்படி புலிகளையும் அழித்து, மாவீரர் துயிலும் இல்லங்களையும் இல்லாதாக்கி விட்டதால் இனி மேல் 'மாவீரர் நினைவேந்தல்' என்ற பேச்சுக்கே இடமில்லை என்றே சிங்களப் பேரினவாதம் கனவுகண்டது. ஆனால், மாவீரர் நினைவுகள் காலத்தால் அழியாதவை என்பதை அதே 2009 நவம்பர் 27 இல் தமிழர் தாயகத்தில் ஒளிவிட்ட மாவீரர் நினைவுத்தீபங்கள் சிங்களப் பேரினவாதத்தின் கனவுகளைப் பொசுக்கின. ஏனெனில் மாவீரர் நினைவேந்தல் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதாக இருந்தபோதும், அது ஒட்டுமொத்த தமிழினத்தின் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து, தவிர்க்க முடியாத ஒரு சடங்காக மாறிவிட்டிருந்தது. எனவேதான் புலிகளையும், மாவீரர் துயிலுமில்லங்களையும் இல்லாதாக்கியபோதும், தமிழ் மக்கள் தம் மனதில் மாவீரர்களுக்கு துயிலுமில்லங்களை அமைத்து, தீபங்களை ஏற்றி நினைவேந்தினர்.


ராஜபக்சக்களின் ஆட்சியில் மாவீரரை நினைவேந்துதல் மிகக் கொடூரமான வகையில் தடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் நினைவேந்தல் தீபங்கள் ஒளிரவே செய்தன. பின்னர் 2015 இல் ரணில்– மைத்திரி ஆட்சியின்போது, நினைவேந்தல்களுக்கான கெடுபிடிகளில் கொஞ்சம் தளர்வு ஏற்பட்டது. ஆனால், மீண்டும் ராஜபக்சக்கள் பதவிக்கு வந்தவுடன் பழையபடி நினைவேந்தல் தடை பல்லவியை பாடத் தொடங்கியதோடு, நினைவேந்துவோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்படுவர் என்று பயங்காட்டினர். நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தில் தடையுத்தரவுகளும் வாங்கப்பட்டன. கொரோனாப்பெருந்தொற்றின் போது அமுலில் இருந்த நடைமுறைகள், சட்டங்கள் என்பவற்றைப் பயன்படுத்தியும் நினைவேந்தல்கள் தடுத்துநிறுத்தப்பட்டன. என்னதான் தடைகள், வழக்குகள், சட்டங்கள் பாய்ந்தபோதும் மாவீரர்களை நினைவேந்துவதை தடுக்கவே முடியவில்லை. இப்போது ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்து மக்கள் புரட்சியின் மூலம் துரத்தப்பட்டு, ரணில் தன் கையில் அதிகாரத்தை எடுத்திருக்கிறார். (ராஜபக்சக்களின் சூத்திரக் கயிற்றில் ஆடும் பொம்மையே ரணில் என்ற கருத்துகளையும் மறுதலிப்பதற்கில்லை) இருப்பினும் ராஜபக்சக்களின் காலத்தைப்போல நினைவேந்தல்களுக்கு நேரடியான கட்டுப்பாடுகள், தடைகள் , இடையூறுகள் ஏற்படுத்தப்படாவிட்டாலும், மறைமுகமாக மிரட்டல்கள், விசாரணைகள், கண்காணிப்புகள், போதைப்பொருளைச் சாட்டாக வைத்து சோதனைகள் போன்ற மறைமுகத்தடைகளை இப்போதே படைத்தரப்பு ஆரம்பித்துவிட்டது. நவம்பர் 27 இல் இவை இன்னும் இறுக்கமாகவும் கூடும்.

இந்தநிலையில் தமிழ் மக்களும், அரசியல்வாதிகளும் படைத்தரப்பின் தடைகளையும், இடையூறுகளையும், விசாரணைகளையும்,அச்சுறுத்தல்களையும் தாண்டி, மாவீரர்களை நினைவேந்துவதற்காக ஒன்றிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தியாகி திலீபனின்நினைவேந்தலை அரசியல் ஆதாயத்துக்காக பங்கு போட முனைந்து, அந்த நினைவேந்தலின் புனிதத்தைக் கெடுக்கும் வகையிலான சம்பவங்கள் மீளவும் நிகழாமல் இருப்பதையும் உறுதி செய்யவேண்டும். மாவீரர்களின் தியாகத்தைக் [illegible] படுத்தும் வகையில் நடந்து கொள்ளாமல் [illegible] ஒருவகையில் மாவீரர்களுக்கான நினைவேந்தல் தான்.

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை" – **ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**






# போதைக் கலாசாரத்தை எதிர்த்து நேற்றுப் போர்!

## மானிப்பாய் பகுதியில் முன்னெடுப்பு

**யாழ்ப்பாணம், நவ.21**

**யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் கலாசாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**



'போதையெனும் உயிர் கொல்லி எம்பாதையில்: இனியும் விழித்தெழாவிட்டால் எம் சந்ததியின் எதிர்காலம் என்ன? அனைவரும் கரம் கோர்ப்போம் ஓரணியாய்' எனும் தொனிப்பொருளில் இளவாலை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தால் இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'புகைக்காதே அழகான வாழ்வை தொலைக்காதே', 'போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாடு எமது சமூகப் பொறுப்பு என்பதை உணர்வோம்','போதையின் திசையில் வாழ்வின் பாதையை மாற்றாதே', 'போதைப் பாவனை நம் வாழ்வுக்கு சூனியம்', 'போதைப் பொருள் அரக்கனை எதிர்த்திட துணிவோம்', உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் குருக்கள், துறவியர், இறைமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-14,125,26,27)

# வடக்கில் காற்றுடன் மழை தொடரும்

வடக்கு மாகாணத்தில் காற்றுடன் மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- நாட்டில் இன்று சில பிரதேசங்களில் மழை பெய்யக்கூடும். தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் நிலவும் குறைந்த அழுத்த பிரதேசம் அடுத்த 36 மணித்தியாலங்களில் ஒரு தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளது.

அது மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து இன்றும் நாளையும் நாட்டின் வடக்குக் கரையை அண்மித்ததாக தமிழ்நாட்டை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதனால் வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது சிறிதளவு மழை பெய்யலாம் என்றுள்ளது. (ம-14,இ)

**நாளை**
**22.11.2022**
**செவ்வாய்க்கிழமை**
**கார்த்திகை 06**

சுபநேரம் : 10.40 – 12.10
ராகுகாலம்: 03.10 – 04.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# சபை நிதி 2021, 2022

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினை கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 16:00 மணிவரை 2022.11.21 ஆம் திகதியில் இருந்து 2022.12.04 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 2022.11.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.04 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2022.12.05 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.11.28 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PII/2022/01 | நாவலடி வைரவர் வீதி. நாச்சிமார் வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், தம்பாலை | 2.09 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/02 | தையப்புல வீதி 3ம் ஒழுங்கை திருத்தம். கதிரிப்பாய் | 3.74 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 38,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/03 | போதிப்பிள்ளையார் வீதி திருத்தம். அச்சுவேலி தெற்கு | 3.89 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 39,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/04 | யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி 2ம். 5ம் உப ஒழுங்கைகள் திருத்தம். அச்சுவேலி தெற்கு | 5.17 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 52,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/05 | வல்லை அராலி வீதி 2ம் ஒழுங்கை திருத்தம். அச்சுவேலி வடக்கு | 1.62 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 17,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/06 | எல்லாளன் வீதி – சரஸ்வதி வீதி இணைப்பு வீதி திருத்தம் (குட்டி கடை முன் ஒழுங்கை). நவக்கிரி | 0.86 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 9,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/07 | உலக்கை புலம் வீதி திருத்தம். ஆவரங்கால் மேற்கு | 3.99 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 40,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/08 | அரசடி வீதி திருத்தம். புத்தூர் கிழக்கு | 3.18 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 32,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/09 | கருமாரி அம்மன் வீதி திருத்தம். புத்தூர் வடக்கு | 4.54 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 46,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/10 | யூலன் வீதி. பூலசிட்டி வீதி திருத்தம். அச்செழு | 2.12 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 22,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/11 | விவசாய வீதி திருத்தம். சிறுப்பிட்டி | 3.60 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 36,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/12 | பெரிய பொக்கணை வீதி திருத்தம். வாதரவத்தை | 1.89 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 19,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/13 | எல்லாளன் வீதி – சரஸ்வதி வீதி இணைப்பு வீதி உப ஒழுங்கை திருத்தம் (குட்டி கடை முன் ஒழுங்கை உப ஒழுங்கை). நவக்கிரி | 2.18 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 22,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/14 | பத்தாவத்தை வீதி திருத்தம். நீர்வேலி மேற்கு | 2.47 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 25,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/15 | மொனரப்புலம் வீதி திருத்தம். நீர்வேலி தெற்கு | 4.46 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 45,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/16 | நீர்வேலி சுன்னாகம் வீதி 6ம் ஒழுங்கை திருத்தம். நீர்வேலி வடக்கு | 2.44 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 25,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/17 | கரந்தன் வீதி உப ஒழுங்கை திருத்தம். நீர்வேலி தெற்கு | 1.64 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 17,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/18 | பரலோக மாதா சேமக்காலை வீதி திருத்தம். நீர்வேலி வடக்கு | 1.40 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 14,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/19 | பாலம் திட்ட குடிமனை வீதி திருத்தம். இருபாலை | 3.33 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 34,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/20 | புதிய செம்மணி வீதி திருத்தம். இருபாலை தெற்கு | 2.02 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/21 | அரசொல்லை வீதி திருத்தம். கல்வியங்காடு | 1.73 | 90 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 18,000.00 | 2023.02.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/22 | கிளுவானை வீதி திருத்தம். கல்வியங்காடு | 4.15 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 42,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/23 | வீரபத்திரர் முனிகோவில் வீதி 2ம் ஒழுங்கை திருத்தம். கோப்பாய் தெற்கு | 2.28 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 23,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/24 | பலாலி வீதி 3ம் ஒழுங்கை திருத்தம். ஊரெழு | 4.43 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 45,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/25 | வாகையடி நவசக்தி இணைப்பு வீதி திருத்தம். உரும்பிராய் வடக்கு | 3.09 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/26 | தம்பசிட்டி வீதி உப ஒழுங்கைகள் திருத்தம். உரும்பிராய் கிழக்கு | 3.27 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 33,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/27 | துவாரகை வீதி திருத்தம். உரும்பிராய் மேற்கு | 7.39 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 74,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PII/2022/28 | யாழ்ப்பாண வீதி 4ம் ஒழுங்கை திருத்தம். உரும்பிராய் மேற்கு | 2.02 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 21,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/01 | விமான நிலைய வீதி திருத்தம். பத்தமேனி | 7.00 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 70,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/02 | பகவான் வீதி திருத்தம். கோப்பாய் தெற்கு | 3.97 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 40,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/03 | வைராக்கண்டி வீதி திருத்தம். கோப்பாய் மத்தி | 3.21 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 33,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/04 | ஊரெழு 1ம் குறுக்கு வீதி 3ம் ஒழுங்கை திருத்தம். ஊரெழு | 3.04 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 31,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/05 | கற்பக பிள்ளையார் 3ம் ஒழுங்கை திருத்தம். உரும்பிராய் வடக்கு | 4.12 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 42,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/2/Council/PIV/2021/06 | மானிப்பாய் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம். உரும்பிராய் வடக்கு | 4.82 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 49,000.00 | 2023.03.06 |

**தியாகராஜா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர். யாழ்ப்பாணம்**

**2022.11.21**

(CR 38507)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 04 - 1936



இறப்பு 16 - 11 - 2022

## திரு. கந்தையா நகுலேஸ்வரன்

(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரி (C.T.B)

யாழ். ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும், பின்னர் ஜேர்மனி Mulheim, Dortmund ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நகுலேஸ்வரன் அவர்கள் கடந்த (16-11-2022) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், சகாதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இராணிமலர் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற யுவராஜன் (ஜேர்மனி), பத்மாராணி (நோர்வே), வரதராஜன் (நோர்வே), சுசிராணி (ஜேர்மனி), விமலராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிக்கோல் (ஜேர்மனி), கோபி (நோர்வே), லோஜினி (நோர்வே), பிரபாகரன் (ஜேர்மனி), ஷாளினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,ஜக்குலின், ஷாளினி, நிஷானி - நேசகுமார், சஜித், மிலேன், டிலானி, அனுஜன், பிரிந்தியா, பிருந்துஜன், அஷ்வின், அக்ஷரா, அர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும்,ஏலியாஸ், அமிலியா, நேகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பார்வைக்கு : Saturday, 19 Nov 2022 12:00 pm - 1:00 pm Haus des Abschieds Bayrische Str. 156, 44339 Dortmund, Germany வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியை Monday, 21 Nov 2022 10:00 am - 1:00 pm Main cemetery Dortmund Am Gottesacker 25, 44143 Dortmund, Germany நடைபெற்று தகனம் Monday, 21 Nov 2022 1:00 pm Main cemetery Dortmund Am Gottesacker 25, 44143 Dortmund, Germany செய்யப்படும்.

இன்று (21.11.2022) திங்கட்கிழமை ஏழாலை மத்தியில் அவரது பூர்வீக இல்லத்தில் இலங்கை நேரப்படி 2.00pm - 5.00pm வரை நினைவஞ்சலி செலுத்தப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு

வரதராஜன் (மகன்) :+4797737602, பத்மாராணி (மகள்) : +4745253385

விமலராஜன் (மகன்) :+4917620900574, சுசிராணி (மகள்) : +4917680404361

(CS 21930) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கேள்வி கோரல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்டவாறு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2022.11.21 – 2022.12.05**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : 2022.12.06 பி.ப 14.30 மணி வரை**
**கேள்வி ஆவணம் திறக்கப்படும் திகதி : 2022.12.06 பி.ப 14.30 மணி**

02. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

04. தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் விலைக்கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள் வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 1,000.00 (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக) இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 10,000.00 (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக) இனையும் பணமாக செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தி "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "Quotation for Supply and Installation of 04 Nos. Desktop Computer with UPS" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் அவசியமாகும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படுதல் வேண்டும். காலந்தாழ்த் தப்பட்டு அல்லது பிந்திக் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

06. விலைக் கேள்வியானது கேள்வி ஆவணம் சமர்ப்பிக்கப்படும் நேரம் முடிவடைந்ததும் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல் அல்லது சேர்த்தல் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடி யாகும் காலம். |
| 1 | Desk Top Computer with UPS | 04 Nos | NP/14/41/ VWPS/G/ 01/2022 | 01 மாதம் | 10,000.00 | 03 மாதம் (20.02.2023) |

**தர்மலிங்கம் நடனேந்திரன்,**
**தவிசாளர்,**
**பிரதேச சபை பெறுகைக்குழு**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

**21.11.2022** (CR 38621)(3/6)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
05 - 12 - 1945

மறைவு
19 - 11 - 2022



### சங்கீத வித்துவான் A.K. கருணாகரன்

*இசைச் சிகரம் சாய்ந்ததுவே*
*கொடுந்துன்பம் நேரிட்டதே*
*காந்தக்குரல் அனலிலிட்ட*
*காகிதம் போல் ஆகியதே*
*தாங்க முடியாத துயரத்தில்*
*தவிக்குதையா எம் நெஞ்சு*

இசைத்துறையில் நீண்ட காலமாக சேவைபுரிந்த மூத்த விரிவுரையாளர் சங்கீத வித்துவான் A.K. கருணாகரன் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலிகள் - ஆன்மா இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**விரிவுரையாளர்கள்,**
**இசைத்துறை, வாத்தியத்துறை,**
**இராமநாதன் அவைக்காற்று மற்றும்**
**காண்பிய கலைகள் பீடம்**

(CS 47771) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 06 . 1925

மறைவு
19 . 11 . 2022



### கைலாயபிள்ளை சிவக்கொழுந்து

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை சிவக்கொழுந்து நேற்று முன்தினம் (19.11.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லத்துரை, இராசையா, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் யோகம்மா, அமரர் சுப்பையா, பூபாலசிங்கம், தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீகாந்தன், கமலாம்பிகை, சந்திரகலா, அமரர் சிவகணநாதன், நித்தியகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமணி, அமரர் கணேசபிள்ளை, அமரர் பாலசுப்பிரமணியம், சுவர்ணமாலா, தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரமோகன் - தாட்சாயினிதேவி, சந்திரகாசன் - தர்மாபதி, கார்த்திகாயினி -சுகணீதகுமரன், கலைவாணி - அமரர் பஞ்சாட்சரநாதன், கலைச்செல்வன் - சிவகௌரி, ஜங்கரன் - அனுஷியா, தாட்சாயினி - கோபிபாலமுரளி, ஜெனார்த்தனன்- சோபிகா, திருக்குமரன் - ஜெயசாங்கரி, சசிபாலன் - ஹம்சலா, பிரதீபன் - மயூரதி, சோபிகா- பிரகாஷ், பிரசன்னா - சரளா, பிரணவன், ஹம்சியா, தனுஜன் ஆகியோரின் பேர்த்தியும், சைத்தரண்யா, சாஹித்தியா, சஹானா, சக்திதரன், அக்ஷன், அகர்ஷன், அஞ்சனன், கௌசிகன், காரணன், கஜசரவணன், கஸ்தூரி, கௌதமன், கஜல்வண்ணன், கஜீபன், கௌசிகா, ஜஸ்வின், ஜங்சியன், அஹானா, சாத்வீகன், அஸ்விகன், சுஜானா, கிரிஸ், பிரீத்தி, லஸ்ஜா, அல்வின், நிலன், ஐஸ்வர்யா, அனஞ்ஞா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு: 077 488 6036,**
**0041779099379**

**குடும்பத்தினர்.**

(CS 21922) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 09 . 1939

மறைவு
18 . 11 . 2022



### அமரர் திருமதி திலகமணி தவமணிநாயகம்

எழுவாவோடையைப் பிறப்பிடமாகவும் உதயதாரகை, கோணப்புலம் வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகமணி தவமணிநாயகம் கடந்த (18.11.2022) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தவமணிநாயகம் (ஓய்வுபெற்ற மின்முகாரி சீமெந்துக்கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கனகமணி (சிங்கப்பூர்), தயாளமணி (அமெரிக்கா), காலஞ்சென்ற தனபாலசிங்கம், கமலமணி, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாகரன் (நோர்வே), தயானந்தன் (மின் இணைப்பாளர்), ரவீந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற முரளிகிருஸ்ணா, யமுனா (யாழ். மாநகரசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாரதாவல்லி (நோர்வே), ரோகினி (அதிபர் - அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), சண்முகராஜா (ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர் இ.போ.ச - காரைநகர்) ஆகியயோரின் மாமியாரும், கோபிசாந், மோகவி, ரவிசாந், சங்கவி, யாதவி, சாம்பவி, சம்புஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் நாளை (22.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துசெல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உதயதாரகை,**
**கோணப்புலம் வீதி,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 224 1693**

(cs 47774) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களிடையே தொழுநோய் பரவல்

## அவதானமாக இருக்குமாறு மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, நவ. 21**

**பாடசாலை மாணவர்களிடையே தொழுநோய் பரவுவது அதிகரித்து வருகின்றது என்று சுகாதார அமைச்சின் தொழுநோய் எதிர்ப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய பாடசாலை மட்டத்தில் தொடங்கப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

நாட்டில் இரண்டு வகையான தொழுநோய் பரவுகிறது. அவை தொற்றக்கூடியவை மற்றும் தொற்றாதவை. இவற்றில் நாட்டில் இதுவரை கண்டறியப்பட்டவற்றில் 60 வீதமானவை பரவுகின்ற தொற்றுக்கள். இந்த வருடம் தொற்றுக்குள்ளான தொழுநோயாளிகளில் 15 வீதம் பாடசாலை மாணவர்கள். இந்த வருடத்தின் முதல் 7 மாதங்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 126 பேரும், கம்பஹாவில் 114 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 82 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர் - என்றார். (ச-இ)

6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 09 . 1963

மறைவு 21 . 11 . 2016



அமரர்

இராசரத்தினம் ரவிச்சந்திரன்

எத்தனையோ சரிவுகளுக்குப் பிறகும்
தைரியமாய் சிரித்துக் கொண்டிருக்கிற
அப்பாவுக்கு நிகரான நம்பிக்கையூட்டும்
புத்தகம் இப் பிரபஞ்சத்தில்
எங்குமே இல்லை.......

மனைவி - சாந்தி
மற்றும் பிள்ளைகள்
கீர்த்தன், தூரிகா (ஜேர்மன்)

## நீர்ப்பாதுகாப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 21

வடமாகாணத்தின் நீர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாநாட்டு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

வடமாகாணத்துக்கான நீர்ப்பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக் கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினுடைய ஆய்வு முயற்சியாக, பல்வேறு துறைசார் நிபுணர்களை ஒன்றிணைத்து வடமாகாணத்தின் நீர்வளப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் இதில் கலந்துரையாடப்படவுள்ளன. (ம-14)



## ஐ.நா. பிரதிநிதிகளுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஐ.நா.வுக்கான சிறப்பு அதிகாரிகள் குழு வடக்கு மாகாண ஆளுநரை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இதன்போது ஐ.நா. குழு வடக்கு அபிவிருத்தி தொடர்பான எதிர்கால செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்ததுடன் அதற்கு தமது பங்களிப்பு தொடர்ச்சியாக இருக்கும் எனவும் ஐ.நா. நிறுவனப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் ஐ.நா.வின் ஆசிய பசுபிக் பிராந்திய அரசியல் விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி பீற்றர் நிக்கோலஸ் டியூ மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவன அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-20)

### சீனாவின் நன்கொடை

## 1,000 தொன் அரிசி நாட்டை வந்தடைவு

கொழும்பு, நவ. 21

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கவென சீனாவால் நன்கொடையளிக்கப்பட்ட அரிசி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி அடங்கிய கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது என இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்தது. இந்த அரிசி கப்பலிலிருந்து இறக்கப்பட்டு விரைவில் விநியோகிக்கப்படவுள்ளது. கடந்த ஜூன் மாதம் முதல் மொத்தம் 7ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி சீனாவால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கடையின் ஓடுபிரித்து 20,000 ரூபா திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 21

காரைநகர் - வலந்தலைப் பகுதியிலுள்ள கடையொன்றில் ஓடுபிரித்து 20 ஆயிரம் ரூபாவும் சிகரெட் உள்ளிட்ட புகை பொருள்களும் நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தின் காரைநகர் பொலிஸ் காவலரணில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடையொன்றின் ஓடு பிரித்து கடையின் உள்ளே நுழைந்த சந்தேகநபர், கடையில் வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபாவையும் புகைப் பொருள்களையும் திருடிச்சென்றுள்ளார்.

அதன்பின்னர் அருகிலுள்ள மற்றுமொரு கடையின் ஓட்டைப் பிரித்து உள்நுழைய முற்பட்ட வேளை, கடையினுள்ளே உறங்கிக்கொண்டிருந்த கடையின் உரிமையாளர் ஓட்டின் சத்தம் கேட்டு மின்குமிழை ஒளிரச்செய்தபோது திருடன் தப்பிச் சென்றுள்ளான் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,125)

## யாழ். தமிழ்ச் சங்கத்தால் சங்க இலக்கிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 21

சங்க இலக்கியம் பற்றிய தெளிவை மாணவர்களிடையே ஏற்படுத்தும் முகமாக யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தால் சங்க இலக்கிய வகுப்புகள் இடம்பெறவுள்ளன.

இந்தக் கற்கைநெறியில் இணைய விரும்புபவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வடக்கு மக்களின் நெருக்கடியைத் தீர்க்குக! ரணிலுக்கு சாள்ஸ் எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலுள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கவேண்டும். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது வடக்கு மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், வடக்கு மாவட்டங்களில் மீனவர் மற்றும் விவசாய சமூகங்களின் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ரணில் கவனத்தில் கொள்ளவேண்டும். மிக முக்கியமாக காணி அபகரிப்பு, மீனவர்கள், விவசாயிகளுக்கான எரிபொருள், விவசாயத்துக்குத் தேவையான பசளை, கிருமிநாசினிகளுடைய விலை அதிகரிப்பு எனப் பல பிரச்சினைகளின் மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மக்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடிநிலை, ரணிலின் வருகை மூலம் தீர்க்கப்படவேண்டும். சம்பிரதாயபூர்வமாக பயணமாக ஜனாதிபதியின் பயணம் அமையக்கூடாது - என்றார். (ம-14,213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கி அதிகாரியின்

# கையை முறித்த சந்தேகநபருக்கு பிணை வழங்க பொலிஸ் அனுமதி

யாழ்ப்பாணம், நவ.21

பிரபல தனியார் வங்கியின் உயர் அதிகாரியை நடுவீதியில் வைத்து கடும் காயம் விளைவிக்கும் வகையில் தாக்குதல் நடத்தியவரை பிணையில் விடுவிக்க புளியங்குளம் பொலிஸார் நீதிமன்றில் அனுமதியளித்தனர்.

புளியங்குளம் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் காலை விபத்து நடந்துள்ளது. கார் -மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காலில் படுகாயமடைந்தார்.

காரை செலுத்தி வந்த பிரபல தனியார் வங்கி ஒன்றின் மேலதிகாரி, மோட்டார் சைக்கிளில் பயணித்து படுகாயமடைந்தவரை அம்புலன்ஸ் வண்டிக்கு அறிவித்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். சம்பவ இடத்துக்கு பொலிஸார் வந்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைக்கும் வகையில் தனது காரை முன்நகர்த்தாமல் அவர் காத்திருந்தார்.

புளியங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கி அவர்கள் சம்பவ இடத்துக்கு வரத் தாமதமாகிய நிலையில் அந்த இடத்துக்கு வேறொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வங்கி மேலதிகாரியை தலைக் கவசத்தால் கடுமையாகத் தாக்கியதுடன் காரையும் பெரும் சேதத்துக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வர தாமதித்த நிலையில் மீளவும் அந்த இடத்துக்கு வந்த அந்த இருவரும் வங்கி மேலதிகாரியின் மீதும் அவருடன் பயணித்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அப்போது வீதியால் பயணித்த சிறப்பு அதிரடிப்படையினர் தாக்குதல்தாரிகளை தடுத்ததுடன் ஒருவரை தடுத்து வைத்தனர். மற்றையவர் அங்கிருந்து தப்பித்தார்.

வங்கி மேலதிகாரி தாக்குதலுக்குள்ளாகி வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே கதிர்வீச்சு சோதனையில் அவரது கை என்பு முறிந்து துகள்கள் தசைகளுக்குள் சிக்குண்டதால் சத்திர சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதையடுத்து வவுனியா மருத்துவமனையிலிருந்து கொழும்பு தனியார் மருத்துவமனைக்கு வங்கி மேலதிகாரி மாற்றப்பட்டார். அவருக்கு அறுவைச் சிகிச்சையளிக்க என்பு முறிவு சத்திரச் சிகிச்சை வல்லுநர் இன்று தவணையிட்டுள்ளதால் தனியார் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். கைகளால் தாக்குதல் நடத்தினர் என்று இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 314ஆம் பிரிவின் கீழ் 'பி' அறிக்கையை தாக்கல் செய்த பொலிஸார் பிணை வழங்க ஆட்சேபணை தெரிவிக்காத நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான வங்கி மேலதிகாரி ஆபத்தான முறையில் தாக்கப்பட்டு தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையிலும் அவரது உடைமை கடுமையான சேதத்துக்குள்ளாக்கப்பட்ட நிலையிலும் புளியங்குளம் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை- இந்தச் சம்பவ இடத்தில் சில மாதங்களுக்கு முன்பு பஸ் ஒன்று விபத்தில் சிக்கியிருந்த நிலையில், சாரதி உயிரிழந்தாரா என்பது உறுதிப்படுத்தப் படாத நிலையில், அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலரால் பஸ் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-எ-26)

## சாலை கடல்...

முல்லைத்தீவு, சாலை கடல் நீர் ஏரியில் மூழ்கி இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளார். அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. ஏரியில் உணவுக்காக ஏரல் எடுக்கச் சென்ற சமயமே இளைஞரைக் கடல் இழுத்துச் சென்றுள்ளது.

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செ.நிசாந்தன் (வயது-26) என்ற இளைஞரே காணாமற் போயுள்ளார்.

ஏரல் எடுக்கச் சென்ற இளைஞர் ஏரியின் ஒருபுறத்தில் இருந்து மறுபுறத் துக்குக் கடந்து செல்ல முயன்றபோதே கடல் நீர் ஓட்டம் இளைஞரை இழுத்துச் சென்றுள்ளது. காணாமற் போன இளைஞரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-19)

காணி விற்பனைக்கு

கிளாலி எழுதுமட்டுவாளில் 7 ஏக்கர் தென்னம் செய்கைக்குரிய காணியும், நெற் செய்கைக்குரிய காணியும் விற்பனைக்கு உண்டு.

சசி- 077 8896 786

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு புவனேந்திரன்



விசுவமடுவை பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கு வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு புவனேந்திரன் நேற்று (20.11.2022) ஞாயிற்றுக் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பரிமளம் தம்பதியரின் மூன்றாவது மகனும், பலாலியைச் சேர்ந்த செல்லப்பா (அமரர்) செல்லம் ஆகியோரின் அன்பு மருமகனும், பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும், கோகுல், சிவா, சுதா ஆகியோரின் சகோதரனும், டிலக்ஷன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி-மாணவன்), சஞ்ஜீவன் (யா/ இந்துக் கல்லூரி மாணவன்), ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2022) திங்கட்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 21935) 1-6

தகவல் : குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 11.06.1944 உதிர்வு 22.10.2022

கடந்த 22.10.2022 அன்று
இறைபதம் அடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

### அமரர் செல்லத்தம்பி சோதி

மண்ணுக்கு வந்து விண்ணுக்கு செல்லும் வரை
தன்னை மறந்து உழைப்பால் உயர்ந்து.
தன் பிறப்பிடத்தில் ஒரு சிங்கப் பெண்ணாக
வலம் வந்தவள் நம் அன்னை
அனைவரினது இல்லத்திலும் உள்ளத்திலும்
நீங்காத இடத்தை பதித்தவள் நம் அன்னை.....
வறுமையிலும் வாடாது முயற்சியால்
வெற்றிவாகை சூடியவள் நம் அன்னை
மறவோம் என்றும் நம் அன்னையை.....

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.11.2022) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. அஸ்தி கீரிமலை புனித தீர்த்தத்தில் கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண மற்றும் மதியபோசன நிகழ்வுகளில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(cs 47734) (2.6)

உங்கள் நினைவுகளுடன்
மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 - 01 - 1937

மறைவு 26 - 11 - 2016

### அமரர் கிட்டிணன் பொன்னையா

திதி: கார்த்திகை அபரபக்க திரயோதசி

ஆண்டு ஆறென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்று வரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன.

உண்மைதானா இதுவென்று - எம்
உள்ளுணர்வு மறுக்கின்றது
அன்பு கொண்ட உம் வதனம் - என்றும்
எம்மோடு இருப்பது போல் உணர்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்.

கோவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

(cr 38623) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்ப்பால்...

யுள்ளனர். குழந்தையின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-9)

## கதிரையைப்...

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் சஜித் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்திருந்தனர். அவர்களுடனும் அவர்களின் ஏற்பாட்டில் அந்தக் கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களுடனும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான ராஜித சேனாரத்னவும் ரணிலுடன் இணையவுள்ளார் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அதேநேரம் அவரும் இப்போது அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றார். இவர்களுக்கு அப்பால் ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் ஒருவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன். அவருடன் சேர்த்து அவரின் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் முற்றாக இணைப்பதற்கான நகர்வு ஒன்று இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

மறுபக்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானும் அரசுக்கான ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசில் ஜீவன் அமைச்சுப் பதவியை வகித்திருந்தார்.

இவர்களை வளைத்துப்போடும் வேலையை முன்னின்று செய்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் - முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவே. அவரது வீட்டிலேயே இது தொடர்பான இரகசியக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தமது பக்கம் இணைகின்றவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காகவே ஜனாதிபதி புதிய அமைச்சரவையை நியமிக்காமல் இழுத்தடித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-22)

## ஜனாதிபதி...

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்வதும், அவற்றுக்குரிய தீர்வுகள் தொடர்பாக ஆராய்வதுமே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்குள்ள ஒல்லாந்தர் கோட்டையின் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார். அதன்பின்னர் நடுக்குடா மீனவ கிராமத்துக்குச் சென்றார். கிராமத்தவர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்திய ஜனாதிபதி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

அதன்பின்னர் மன்னார் காற்றாலை அமைக்கப்படும் பிரதேசத்தையும் ஜனாதிபதி ஆராய்ந்தார். கற்றாலை மின் உற்பத்தி நிலையத்தில் எதிர்காலச்செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்ந்த ரணில், அந்தப் பகுதி மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதியின் மன்னார் பயணத்தின் போது ஊடகவியலாளர்கள் எவரும் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை. ஜனாதிபதி ஊடகப் பிரிவு மட்டுமே தகவல்களை வெளியிட்டுள்ளது. (அ-எ-60-213)

## நாடு...

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்ச ஒன்றரை மாதங்களின் பின்னர் நேற்று நாடு திரும்பியமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் பஸில் ராஜபக்சவின் வரவை மொட்டுக் கட்சியின் உறுப்பினர்கள் ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டனர். அவர் வந்தால் நாடு பிரகாசிக்கும் என்றார்கள். இறுதியில் என்ன நடந்தது? அவர் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். நாடு வங்குரோத்து அடைந்தது.

பஸில் ராஜபக்ச நாடு திரும்பியதால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர் ஒன்றும் ஞானி கிடையாது. நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான பொறுப்பை அவர் மீளவும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனெனில் நிதி அமைச்சர் என்ற முறையில் அவரது செயற்பாடுகள், நடவடிக்கைகள் என்பன நாடு வங்குரோத்து அடைவதற்கு மற்றுமொரு காரணியாக அமைந்திருந்தது.

இந்த அரசைக் கொண்டு நடத்துபவர் பஸில் ராஜபக்ச என்பது தற்போது தெளிவாகின்றது. அமைச்சுகளுக்கும் பதவிகளுக்கும் நபர்களைப் பரிந்துரைக்கும் பொறுப்பை அவர் திரைமறைவிலிருந்து செயற்படுத்தி வருகின்றார். அரசையும் ஜனாதிபதியையும் இயக்கும் நபராகப் பஸில் ராஜபக்ச திறைமறைவிலிருந்து செயற்பட்டு வருகின்றார்-என்றார். (அ-எ-22)

## நீரில்...

கிளிநொச்சியைச் சேர்ந்த இந்த யுவதி கற்கோவளத்தில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்தபோதே இந்த அனர்த்தம் நடந்துள்ளது. நேற்று கற்கோவளம் கடற்கரைக்குச் சென்ற யுவதியும் நண்பர்களும் அங்கு நீராடியுள்ளனர். பின்னர் கடற்கரைக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கத்தில் நீராடியபோதே யுவதி நீருக்குள் மூழ்கியுள்ளார்.

நண்பர்களின் கூக்குரல் கேட்டு, அருகில் உள்ள இராணுவத்தினர் யுவதியை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். ஆயினும் யுவதி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்டப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொட்டடியில் உள்ள வீடு ஒன்று சோதனையிடப்பட்டது. அதில் 500 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மீது ஏற்கனவே நீதிமன்றத்தில் போதைப்பொருள் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர்களுக்கு மாதகல் பகுதியில் இருந்து போதைப்பொருள் கிடைப்பது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26-20-27)

## கஞ்சா...

சந்தேகநபரிடம் இருந்து 55 கிராம் மாவா போதைப் பாக்கு கைப்பற்றப்பட்டது என்றும், அதில் கஞ்சா கலக்கப்பட்டிருந்தது. சந்தேகநபர் வீட்டில் வைத்து மாவா போதைப் பாக்கு விற்பனை செய்பவர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## ரூ.12 மில்...

பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நோர்வேயில் இலங்கையர் ஒருவரிடம் 23 வங்கி கணக்குகள் ஊடாக இவ்வாறு 120 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான இரு பெண் சகோதரிகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பட்ஜெட்டுக்குப்...

விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார்.

அவர்களுள் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டா என்று அறியமுடிகின்றது. அவர் வட மத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

அவரது ஐ.தே. க.பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-22)

## 18 கிராம்...

அவரிடம் இருந்து 18 கிராம் 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அண்மைய நாள்களில் ஒரு நபரிடம் இருந்து மீட்கப்பட்ட அதிகூடிய தொகையாக இந்தக் ஹெரோய்ன் அமைந்துள்ளது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மேற்படி 23 வயதான இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இளைஞருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-14-125)

## மாவீரர் வாரம்...

களை ஒருவாரம் நினைவேந்தி நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் தமிழ் மக்களால் வருடாந்தம் முனனெடுக்கப்படும். இந்த ஆண்டும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மாவீரர் நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாகின்றது. தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

தாயகத்தில் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துயிலும் இல்லங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் முனனெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-இ)

## மாவீரர்களின்...

சாவடைந்த புலிகள் இயக்கப் போராளிகளையும் தவிர வேறெவரையும் இடைச்செருகலாக இணைத்து மாவீரர்களின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என மாவீரர் அறிவிழியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

-இவ்வாறு முன்னாள் போராளியான பஸீர் காக்கா தெரிவித்துள்ளார். அவர் வெளிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வேறு யாரையாவது நினைவுகூர வேண்டுமென வலியுறுத்தும் தரப்புகள் தங்கள் கட்சியின் நிறுவுநர்களின் நினைவு நாளிலோ, பிறந்தநாளிலோ தனியாக நினைவு கூருவதற்கு உள்ள உரிமை பற்றி எவரும் ஆட்சேபணை தெரிவிக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சி என்று தம்மை அடையாளப்படுத்தும் தரப்பின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துக்களை காணொலி மூலம் அண்மைய நாள்களில் காணக்கூடியதாக இருந்தது. அதில் ஏனைய தரப்பினர் அனைவரையும் மாவீரர் நாளில் நினைவுகூர வேண்டுமென தாங்கள் முடிவெடுத்துள்ளோம் என்று அவர் குறிப்பிடுகிறார். உலகில் ஒழுக்கத்துக்கு உதாரணமான அமைப்பாகக் குறிப்பிடப்படுவது விடுதலைப் புலிகளையே. புகைத்தல் உட்பட போதைப் பொருள் பாவனை, மது போன்ற விடயங்களில் கண்டிப்பாக இருப்பது புலிகளின் வரலாறு. அவர்களின் ஒழுக்கம், தலைமைக்குக் கட்டுப்படல் போன்ற விடயங்கள் உலகறிந்தது. அவ்வாறு இருக்கையில் ஏனையவர்களை இந்தப் பட்டியலில் இணைக்க முயல்வது விடுதலைப் போராட்டத்தின் அரிச்சுவடியைக் கூட இவர்கள் கற்க முனையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

செருப்புக்கு அளவாக காலை வெட்ட வேண்டும் என்ற பாணியில் கஜேந்திரகுமார் சொல்லும் விடயங்களின் உள் நோக்கத்தைப் பார்த்தால் 13ஆவது சட்டத்திருத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டுள்ள இயக்கங்கள் கட்சிகளுக்கு அவர் நேசக்கரம் நீட்டுவதை உணர முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 'தலைவர்' உருவாக்கும் சூழல் அன்றைய கால அரசியல் நிலைமைகளால் உருவானது. அதற்காக மாவீரர் பட்டியலில் அவர்களை இணைக்கத் தயாராக இருக்கவில்லை.

இலட்சியத்துக்காக இந்த மண்ணில் மாவீரர்களானவர்களின் ஆன்மாவைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கைவிடவேண்டும். எந்தக் காலத்திலும் தங்கள் பெயர் மாவீரர் பட்டியலில் இடம்பெறாது எனத் தெரிந்து கொண்டும் தம்முயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களும் இருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த மண்ணில் அரசியல் இலாபத்துக்காக செய்யும் கோளாறுகளை ஒவ்வொருவரும் நிறுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணாக என்னை ஏன் மதிக்கவில்லை?

## ஐக்கிய மக்கள் சக்தியிடம் வினவுகிறார் டயானா கமகே



**கொழும்பு, நவ. 21**

**ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னை பெண்ணாக ஏன் மதிக்கவில்லை? நானும் ஒரு பெண்தான் - இவ்வாறு தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு முதலீடு பெற்றுக் கொள்ளும் நோக்கில் கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்குமாறு குறிப்பிட்டதை தொடர்ந்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளேன். எமக்கு எதிரான சேறு பூசலை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் பெண் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் பெண்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள். பெண் உரிமைகளை அரசியல் நோக்கத்துக்காகவும், கட்சி வேறுபாட்டுக்காகவும் மாற்றியமைக்கக்கூடாது. பெண் உரிமைக்கான போராட்டமானது அரசியல், கட்சிக் கொள்கைக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படவேண்டும். எதிர்க் கட்சியின் தலைவர் எனக்கு எதிராக முன்னெடுக்கும் சேறு பூசலை தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ம)

**DHL துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

▲சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲கனடா 11 Kg - 1200/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (CS 21214) (3/6)

தொடர்பு : 076 702 3565

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
01. பிளம்பர் (Plumber)
02. எலக்ரீசியன் (Electrician)

நேர்முகத்தேர்வு :
21.11.2022 திங்கட்கிழமை
மு.ப. 9.00 - 12.00.
பி.ப. 4.00 - 6.00 மணிவரை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஓமானுக்கு ஆட்கடத்தல் சூத்திரதாரிக்கு மறியல்!

சுற்றுலா விசாவை பயன்படுத்தி ஓமானுக்கு இலங்கைப் பெண்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து நாட்டுக்கு வருகைதந்த நிலையிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வத்தளையை சேர்ந்த 40 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர், மருதானையில் அலுவலகம் ஒன்றை நடத்தி ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை- இலங்கையிலிருந்து ஓமானுக்கு ஆட்களை கடத்திய குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேகநபர் ஒருவரை அவிசாவளை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

**விற்பனைக்கு**

அரபு நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட TCL 55- SMART T.V அத்துடன் T.V, 32", 21" மற்றும் வீட்டு பாவனைக்குரிய பொருட்கள், மின்சார இலத்திரனியல் அடங்கலாக.

T.Sooriyakumar, 077 257 1005
72, Karaikaddu Lane Vannarpannai Jaffna.

**சுடச்சுட Win 100, 000/-**

அப்பம், வடை, சிற்றுண்டிகள் மேலும் பல
11Am - 10 Pm (CS 47772) (3/6)
யாழ். பாடி - தங்கும் இடம் / உணவகம்
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
021 222 6868 / 077 734 0026

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 - 12 - 1939 | 19 - 11 - 2022 |



### திரு. கிறிஸ்தோத்திரம் ஸ்ரனிஸ்லோஸ்

ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்தோத்திரம் ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோத்திரம் லூயிஸ்ஸம்மா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பர்னாந்து அக்னேஸ் அவர்களின் அன்பு மருமகனும், பார்பரம்மாவின் அன்புக் கணவரும், வளர்மதி, அருட்சகோதரிகள் நிமலின், ஃபிறிஜிடியா, எனிட், சாமுவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரனி, விமலன், கிரிஷாந்தி ஆகியோரின் மாமனாரும், றோசா, லீனஸ், காலஞ்சென்ற அருட்சகோதரி தெக்ளா மற்றும் அன்னராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் லக்ஷிதன், சுலக்ஷன், ஷெரோன், கிறிஸ்ரியன், டினோஷியா, டானியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.11.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 2.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு ஊர்காவற்றுறை தூய யாகப்பர் ஆலயத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 477713 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.